எடுக்குமாறு அரசு கேட்டுக்கொள்ளும். குறிப்பாக இந்த ஒரு ஆண்டில் இந்த வெறி நாய் கடிபட்டவர் அதிகம் என்று சொல்லத் தக்க வகையில் அரசாங்கத்திற்கு குறிப்பில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, நகரசபைகளும் மாநகராட்சிகளும் வெறி பிடித்த நாய்களை அடியோடு அகற்றுவதற்கு, குறைப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கை என்ன, எந்த முறையில் நாய்களைப் பிடிக்கிறார்கள் அல்லது வேறு என்ன செய்கிறார்கள், அவைகளைப் பிடித்து பிறகு என்ன செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இங்கே விளக்கம் இந்த விடையில் காணப்படவில்லையென்று சொன்னாலும், வெறி பிடித்த நாய்களை ஊழியர்கள் கண்டுபிடித்துக் கொல்லுவது ஒன்றுதான் இன்றைக்குள்ள ஒரே வழி.

Government Hospital, Erode

* 275 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any representation has been received for up-grading the Government Hospital at Erode into District Head-quarters Hospital and appointing a District Medical Officer; and

(*b*) if so, the action taken thereon by the Government?

அரசினர் மருத்துவமனை, ஈரோடு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். சி செங்கோட்டு வேலப்ப கவுண்டர் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஈரோட்டிலுள்ள அரசினர் மருந்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தி மாவட்ட மருத்துவ அதிகாரி D.M.O.) நியமனம் செய்யக் கோரி வேண்டுகோள் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

1972 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) கோவை மாவட்ட தலைமை மருத்துவமனையை ஈரோடுக்கு மாற்ற அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படும்.

Dispensary in Seithur

* 276 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Town Panchayat of Seithur has requested the Government to upgrade the dispensary in Seithur into a hospital and has come forward to offer the necessary financial assistance and the site therefor;

(*b*) if so, the details thereof; and

(*c*) the decision taken by the Government thereon?

சேத்தூரிலுள்ள மருந்தகம்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஜில்லா சேத்தூரில் உள்ள மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றும்படியும், அதற்கு இடமும் நிதி உதவியும் அளிப்பதாயும் சேத்தூர் நகர பஞ்சாயத்து கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

(உ) அதன்பேரில் அரசு எடுத்த முடிவென்ன?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) & (உ) இவ்வாண்டு இம்மருந்தகத்தை அரசு ஏற்கவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, அரசு இந்த ஆண்டு ஏற்கவில்லையானாலும், அடுத்த ஆண்டு இதை மருத்துவமனையாக அமைப்பதற்கான திட்டம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.